# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.

**Spl.C.C.No.2 of 2025**

(Spl.C.C.No. 4 of 2022 - CJM, Vellore)

Prosecution Witness No.P.W.12 (L.W.21)

| | |
|---|---|
| Name | **அமித் நவாஸ்** |
| Father/Husband Name | **அப்துல் அபிஸ்** |
| Calling/Occupation | BDO Retired |
| Age | 66 |
| Address | 8/23 Noor Ahmed Ist Street,<br>Pernambut. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 26.11.2025.

(Accused 1 to 4 present)

**முதல் விசாரணை**

நான் வேலூர் மாவட்டம் கந்திலி வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து 2017 ஆம் ஆண்டு பணிஓய்வு பெற்றுவிட்டேன். 2011 முதல் 2014 வரை துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்து வந்தேன். துணை வட்டார வளர்ச்சி அலுவலரின் வேலை அலுவலக நிர்வாகம் மேலும் ஊராட்சி ஒன்றிய குழுவுடன் நிறைவேற்றப்படும் தீர்மானம் குறித்து அந்த பணிக்கு டெண்டர் வைத்து குறைவாக

எடுக்கும் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கிய பின்னர் ஒன்றிய பொறியாளர் மேற்பார்வையில் அந்த வேலை செய்து முடிக்கப்படும். அந்த வேலை செய்து முடித்தபிறகு அந்த வேலைக்கான பணத்தை ஒப்பந்ததாரருக்கு வழங்கவேண்டி சம்மந்தப்பட்ட உதவி பொறியாளர் மற்றும் ஓவர் சியர் மூலம் எம்.புக் மற்றும் பில்களை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் கொடுப்பார். எம்.புக் மற்றும் பில்களை உதவியாளர் மற்றும் கணக்காளர் சரிபார்த்து பட்டியல் தயார் செய்து அவர்கள் சுருக்கொப்பம் செய்து என் பார்வைக்கு வைப்பார்கள். நான் அதனை சரிபார்த்து சரியாக இருந்தால் சுருக்கொப்பம் செய்து வட்டார வளர்ச்சி அலுவருக்கு அனுப்பி வைப்பேன்.

குண்டலபட்டி ஊராட்சி கோக்கதூர் கிராமம் ஆள்துளை கிணறு அமைப்பது தொடர்பான ஒப்பந்ததாரர் முனுசாமி. புதிய ஆள்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைப்பதற்காக பொது நிதியியிலிருந்து ரூ.2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த பணிகள் குறித்து எம்.புக் மற்றும் பில்கள் என் பார்வைக்கு வைக்கப்பட்டு நான் அதனை பார்வையிட்டு சரிபார்த்து எம்.புக்கில் சுருக்கொப்பம் செய்து, வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பி வைத்தேன். என்னுடைய பணி கள ஆய்வு செய்வது அல்ல. கோப்புகளின் அடிப்படையில் நான் சரிபார்த்து சுருக்கொப்பம் செய்து வட்டார வளர்ச்சி அலுவலரின் பார்வைக்கு வைப்பது என்னுடைய பணி.

இந்த வழக்கை பொறுத்தவரையில் தவறுதலாக பணம் எடுத்துவிட்டார்கள் என்று நான் கேள்விப்பட்டேன்.

என்னிடம் காண்பிக்கப்படும் எம்.புக்கில் 13ம் பக்கத்தில் இடது பக்கத்தில் Cheque, amount, date ல் உள்ள புளூ கலர் பேனாவினால் இடப்பட்ட சுருக்கொப்பம் என்னுடையது தான். அதேபோன்று வலது பக்கத்தில் ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் என்ற சீலுக்கு கீழ் புளூ கலர் பேனாவினால் இடப்பட்ட சுருக்கொப்பம் என்னுடையது தான். இடது மற்றும் வலது பக்கத்தில் ஆணையாளர் என்ற சீலுக்கு மேல் பச்சை இங்க் பேனாவினால் கையொப்பம் இட்டுள்ளது சுரேஷ் பாபு ஆணையாளர். அதே புக்கில் 12ம் பக்கத்தில் விக்டர் அமிர்தராஜ் உதவி செயற்பொறியாளர் (AEE) கையொப்பம் போட்டுள்ளார். அதே புக்கில் 7, 8 மற்றும் 11ம் பக்கத்தில் யூனியன் இன்ஜினியர் ராஜேந்திரன் கையொப்பம் போட்டுள்ளார். அதே புத்தகத்தில் 2, 5 மற்றும் 7ம் பக்கத்தில் பச்சை நிற இங்கில் விக்டர் அமிர்தராஜ் உதவி செயற்பொறியாளர் கையொப்பம் செய்துள்ளார்.

மேலும் என்னிடம் காண்பிக்கப்படும் Final contract certificate, Baba artist, Ramesh Photo Studio Ex.Ph.12, 13 and 15 ஆகிய ஆவணங்களில் புளூ கலர் பேனாவினால் இடப்பட்ட சுருக்கொப்பம் என்னுடையது தான். அதே போன்று என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண பட்டியல் எண்.13 ல் Challan for the payment of money into Panchayat Union ORIGINAL என்ற ஆவணத்தில் MANAGER என்ற இடத்தில் இடப்பட்டுள்ள

சுருக்கொப்பம் என்னுடையது தான். அதே போன்று என்னிடம் காண்பிக்கப்படும் Exhibit P11–ல் தேதி 17.07.2012 புளூ கலர் பேனாவினால் இடப்பட்ட சுருக்கொப்பம் என்னுடையது தான். இதுசம்மந்தமாக என்னை விஜிலென்ஸ் போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

Union funds–க்கு யூனியன் தீர்மானம் போட்டு என்ன என்ன வேலை செய்யவேண்டும் என்று தீர்மானம் போட்டு கொடுப்பதின் அடிப்படையில் தான் அந்த தொகை ஒதுக்கீடு செய்யப்படும் என்றால் சரிதான். தீர்மான எண்.81ன்படி கோக்கனூர் கிராமத்தில் ஆள்துளை கிணறு புதியதாக அமைக்கவேண்டும் என்று தான் சொல்லப்பட்டுள்ளதே தவிர குறிப்பாக அந்த ஊரில் எந்த இடம் என்று தீரமானத்தில் குறிப்பிடவில்லை என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து சரிதான் என்று சாட்சியம் அளிக்கிறார். தீர்மான எண்.89–ன்படி ஏற்கனவே தீர்மான எண்.81ன்படி ஆள்துளை கிணறு புதியதாக போடுவதற்கு நீர்வளம் எங்கும் இல்லாததால் ஏற்கனவே இருந்த பழுதடைந்த கைபம்பை அகற்றிவிட்டு அதனையே ஆழப்படுத்தி பிலஷ்அவுட் செய்து மின்மோட்டார் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கவேண்டும் என்று தீர்மானம் போடப்பட்டுள்ளது என்றால் சாட்சி அவணத்தை பார்த்து சரிதான் என்று சொல்கிறார்.

ஒன்றிய குழு தலைவரை பொறுத்தவரையில் தீர்மானம் போடுவது மட்டும் தான். நிர்வாக அனுமதியை ஒன்றிய குழு தலைவர் கொடுத்துள்ளார். இரண்டாவதிற்கு தீர்மானத்திற்கு நிர்வாக அனுமதி தேவையில்லை என்றால் தேவையில்லை. குண்டலப்பள்ளி கோக்கனூர் கிராமத்தில் ஆள்துளை கிணறு அமைப்பது தொடர்பான ஒப்பந்த புள்ளியில் முனுசாமியும், சரவணகுமார் என்பவர்கள் கலந்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். சலான் கட்டி அந்த ரசீதினை என்னிடம் காட்டியபிறகு தான் டென்டர் பார்ம் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரிடம் கொடுப்பேன் என்றால் சரிதான். டென்டர் செட்யுலிலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். (Document No.13).

சரவணகுமார் என்பவர் சலான் கட்டி அதனை நான் பார்த்து அவருக்கும் நான் டென்டர் செட்யுல் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். (Document No.11). அந்த டென்டர் செட்யுலில் என்னுடைய சுருக்கொப்பம் உள்ளது என்றால் சரிதான். அந்த contractor இடம் தான் டென்டர் செட்டியுல் கொடுப்பேன்.

பட்டியலை சரிபார்க்கும்போது செய்த பணிகளுக்கு எல்லா ஆவணங்களும் vouchers, bills உட்பட சரியாக இருந்தால் தான் அந்த பில் பாஸ் செய்யப்படும் என்றால் சரிதான். சரவணகுமார் செலுத்திய டெபாசிட் தொகை இந்த பணி தொடர்பான டெபாசிட் தொகை மற்றும் வேறு பணி தொடர்பான டெபாசிட் தொகை ஆகியவை அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

என்னிடம் காண்பிக்கப்படும் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் செயல்முறையில் 27.04.2012 தேதியிட்ட ஆவணத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் என்று சீல் இடப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளது என்னுடையது அல்ல. ஆணையாளர் ஊராட்சி ஒன்றியம் பேர்ணாம்பட்டு என்று தட்டச்சு செய்யப்பட்ட இடத்திற்கு கீழே உள்ள வலதுபுறம் கடைசியாக உள்ள சுருக்கொப்பம் என்னுடையது தான். அந்த ஆவணம் எ.த.சா.ஆ.3.

ரூ.8206/- அவருக்கு இந்த பணி உட்பட காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்குண்டான பதிவுகளும் காசோலை எண்ணும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்பந்ததாரர் ஆஜர்படுத்தும் பொருட்களை வாங்கியதற்கான ரசீதுகள் குறித்து நேரடியாக அந்த கடைக்கு சென்று இப்பொருட்கள் வாங்கப்பட்டதா இல்லையா என்று விசாரிக்கவேண்டியது என்னுடைய வேலை அல்ல.

மறுவிசாரணை (அனுமதியுடன்)

டெண்டர் பார்ம் காசாளரிடம் கொடுத்து அதன்பின்னர் தான் என்னிடம் வரும் என்றால் சரிதான். அனுமதிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் நேரடியாக வந்து பணம் கட்டவேண்டும். அப்படி அவர் வர

முடியவில்லை என்றால் வேறு யாரேனும் அவர் சார்பாக வந்து பணத்தை செலுத்தி டெண்டர் பார்ம் வாங்கிக் கொண்டு போகலாம்.

எம்.புக்கை ஒன்றிய பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஓவர்சியர் ஆகியோர்கள் தான் பதிவு செய்து கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

மறுகுறுக்கு விசாரணை இல்லை.

ELAVARASAN

Digitally signed by ELAVARASAN
Date: 2025.11.26 15:42:56 +0530